முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு சென்று - தேவையான இடங்களில்

புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்!

கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தகவல்!

சென்னை, பிப். 17 -

சட்டப் பேரவையில் உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தேவையான இடங்களில் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டிடங்கள் கட்டித் தரப்படும் என்று தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளும் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அளித்த பதிலும் வருமாறு:-

செ.ஸ்டாலின் குமார்: துறையூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன். திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் சட்டமன்றத் தொகுதி, துறையூர் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவது தொடர்பான கருத்துரு தற்போது மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இக்கருத்துருவினை பரிசீலித்து மேற்படி துறையூர் வட்டாட்சியர் அலுவலகம் புதியதாக கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

செ. ஸ்டாலின் குமார்: எங்களுடைய துறையூர் வட்டாட்சியர் அலுவலகமானது, 1970 ஆம் ஆண்டு முதல் துறையூர் வட்டாட்சியர் அலுவலகம், ஆதி திராவிடர் தனி வட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட பழங்குடியினர் நல அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், வனச் சரகர் அலுவலகம், இ-சேவை மையம், ஆதார் மையம், கிளைச் சிறைச் சாலை, சமூகப் பாதுகாப்பு வட்டாட்சியர் அலுவலகம், வட்ட வழங்கல் அலுவலர் உள்ளிட்ட அலுவலகங்கள் 50 ஆண்டு பழமை யான ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அங்கே புதிய கட்டடம் கட்டுவதற்கு, CRA அலுவலகத்திற்கு கடந்த செப்டம்பர், 2022 ஆம் ஆண்டு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பரிசீலனை செய்ய ஏதுவாக, புதிய வட்டாட்சியர் அலுவலகத்தை அமைத்துத் தருவார்களா என அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்: மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு, ரூபாய் 5 கோடியே 6 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டுவதற்கு, அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளது. தகுந்த பரிசீலனை செய்து உடனடியாக வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

செ.ஸ்டாலின் குமார்: துறையூர் வட்டத்தில், உப்பிலியாபுரம் பேரூராட்சி, பால கிருஷ்ணம்பட்டி பேரூராட்சி, உப்பிலியாபுரம் ஒன்றியத்தில் உள்ள 18 ஊராட்சிகளில் 34 வருவாய்க் கிராமங்கள் இருப்பதாலும், அரசாணை எண் 279ன்படி, 500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பகுதியாகவும், இங்கிருக்கக்கூடிய பழங்குடியின மக்கள் வாழக்கூடிய தென் புறநாடு கிராமத்திலிருந்து 16 குக்கிராம மக்கள் 40 கிலோ மீட்டர் மலையிலிருந்து அனைத்துத் தேவைக்கும் கீழ்ப் பகுதியான உப்பிலியாபுரம்தான் வர வேண்டும். உப்பிலியாபுரம் பகுதியானது மையப் பகுதியாக உள்ளது. எனவே, இங்கிருந்து துறையூர் தாலுகாவிற்கு செல்ல வேண்டுமென்றால், 45 கிலோ மீட்டர் பயணம் செய்யக்கூடிய சூழல் இருக்கிறது. கிழக்குத் தொடர்ச்சி மலையான பச்சை மலையும், கொல்லிமலையும் சுற்றி யிருக்கக்கூடிய பகுதியில் உப்பிலியாபுரம் பகுதி இருக்கிறது.

உப்பிலியா புரம் பேரூராட்சி, பால கிருஷ்ணம்பட்டி பேரூராட்சி, உப்பிலியாபுரம் ஒன்றியத்தில் 18 ஊராட்சி மக்களின் கோரிக்கையாக இருக்கக்கூடிய, மையத்தின் பகுதியாக இருக்கக்கூடிய உப்பிலியாபுரம் பகுதியை மையமாகக் கொண்டு புதிய வட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்: உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தை நாங்கள் கவனத்திலே வைத்துக்கொள்கிறோம். இதுபோன்று நிறைய இடங்களில் வட்டங்கள் பிரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அவைகள் தகுந்த நேரத்தில், நிதிநிலைக்கே ற்றார் போல், முதலமைச்சர் அவர்களிடம் கலந்துபேசி அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

ஆபத்தான நிலையில் உள்ள

வந்தவாசி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டித் தாரீர்!

சட்டப் பேரவையில் எஸ்.அம்பேத்குமார் வலியுறுத்தல்!

சென்னை, பிப். 17 -

ஆபத்தான நிலையில் உள்ள வந்தவாசி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டித் தாரீர் என சட்டப் பேரவையில் உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார் வலியுறுத்தினார்.

இதுகுறித்து சட்டப் பேரவையில் அவர் எழுப்பிய கேள்வி வருமாறு:-

எஸ்.அம்பேத்குமார்: வந்தவாசி வட்டாட்சியர் அலுவலகம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட ஒரு பழமையான அலுவலகம். அந்த அலுவலகத்தின் நிலைமை தற்போது மிகவும் சிதில மடைந்து மழைக்காலத்தில் dampness ஈரக்கசிவு ஏற்படுகிறது. அதுமட்டுமல்லாமல் அந்தக் கட்டடம் road levelல் இருந்து, அந்தக் கட்டடத்தின் ground level 3 அடி தாழ்வாக இருக்கின்ற காரணத்தினால் மழை காலங்களில் மழை நீர் உள்ளே தேங்கியதால் அலுவலர்கள் வேலை செய்வதற்கு மிகவும் சிரமப்படு கிறார்கள். பொது மக்கள் அலுவலகத்திற்கு வந்து செல்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, ஆபத்தான நிலையில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்: உறுப்பினருடைய கோரிக்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. இதுபோன்று நிறைய பழமையான கட்டடங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் புதுப்பிக்க வேண்டுமென்று அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அதுகுறித்து முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றிருக்கிறோம். அப்படி வருகின்ற நேரங்களில், எந்தெந்த வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறதோ, RDO அலுவலகம் எது மோசமாக இருக்கிறதோ ஆய்வு செய்து, அதை முன்னுரிமையின் அடிப்படையில் அந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தர்.

எ.வ.வேலு சிறப்புரை ஆற்றுகிறார்!

வேலூரில்-இன்று மாபெரும் தி.மு.க.பொதுக்கூட்டம்!

வேலூர், பிப். 18 -

வேலூர் நாடாளுமன்ற தொகுதிதி.மு.க சார்பில் 2024தேர்தலில் 'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்' மாபெரும் பொதுக் கூட்டம் இன்று அண்ணா கலையரங்கம் அருகில் மாலை6 மணிக்கு நடக்கிறது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ, தலைமை தாங்குகிறார். திருப்பத்தூர் மாவட்டகழக செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், திருப்பத்தூர் மாவட்டகழக அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், மாவட்ட துணை செயலாளர்கள் ஜி.எஸ்.அரசு, எஸ்.பாண்டியன், மலர்விழி லோகநாதன், திருப்பத்தூர் மாவட்ட துணை செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், சாந்தி சீனிவாசன், கே.பி.ஆர்.ஜோதிராஜன், ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

பொதுப்பணித்துறை அமைச்சர் - கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எ.வ.வேலு சிறப்புரை ஆற்றுகிறார். இதில் ஆம்பூர் தொகுதி எம்.எல்.ஏ. அ.செ.வில்வநாதன், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், தலைமை கழக நிர்வாகிகள் டாக்டர் வீ.எஸ்.விஜய், சி.ஞானசேகரன், எம்.நூருல்லா, டாக்டர் ராஜேஸ்வரி மோகன் காந்தி, ஜி.ரமேஷ், டி.கென்னடி,என் .சுப்பிரமணி, சி.கோபி, பிரம்மபுரம் பழனி, தலைமைகழக தொகுதி பார்வையாளர்கள் குறிஞ்சி சிவா, முன்னாள் எம்எல்ஏ இ.ஜி.சுகவனம், பொள்ளாச்சி ம.உமாபதி, வி.விஜயகுமார், வி.பி. பொன்னரசு,

பி.தர்மசெல்வன், ஒன்றிய கழக செயலாளர்கள் சி.எல்.ஞானசேகரன்,எல்.ரவிச்சந்திரன், பி.வெங்கடேசன் என்.இ. சத்தியானந்தம், கள்ளூர் ரவி, ப.ச.சுரேஷ் குமார்,கே.சீதாராமன்,ஜி.குமார பாண்டியன், எஸ்.சரவணன், கே.ஜனார்த்தனன், என்.கஜேந்திரன், நத்தம் வி.பிரதீஷ், எம்.டேவிட்,க.கருணாகரன்,எஸ். தணிகாசலம், சி.ரவி,ஏ.கே.முருகன், மற்றும் ஊராட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் கலந்துகொள்கிறார்கள். முடிவில் சேண்பாக்கம் பகுதி கழக செயலாளர் பி.முருக பெருமாள் நன்றியுரை ஆற்றுகிறார்.

இந்த இரண்டரை ஆண்டு 'திராவிட நாயகன்' ஆட்சியில்

3 இலட்சம் கோடி ரூபாய் அந்நிய முதலீடுகள் குவிந்துள்ளன!

சட்டப் பேரவையில் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தகவல்!

சென்னை, பிப். 17-

சட்டப் பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் தொழில் முதலீடுகள் குறித்துப் பேசிய போது, குறுக்கிட்டுப் பேசிய அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, "இந்த இரண்டரை ஆண்டு திராவிட நாயகன் தளபதி ஆட்சியில் மூன்று இலட்சம் கோடி

ரூபாய் அந்நிய முதலீடுகள் குவிந்துள்ளன" எனக் குறிப்பிட்டார். சட்டப் பேரவையில் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா குறிப்பிட்டதாவது:

எந்த விவரமும் தரவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். அவர்கள் நடத்திய முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கும், தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட நாயகன் அவர்கள் நடத்திய முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. இரண்டு இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரம் கோடி முதல் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலீடாக கிடைத்தது என்று அவர்கள் கூறினார்கள்.

ஆனால் எத்தனை வந்தது என்பது குறித்து இந்த உலகறியும். அதற்குள் நான் செல்ல விரும்பவில்லை. conversion rate மிகவும் poor ஆகத்தான் இருந்தது. ஆனால் இந்த முதலீட்டாளர் மாநாட்டைப் பொறுத்தவரை, முதலமைச்சர் அவர்கள் பதவியேற்று இந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் மட்டுமே ஏறத்தாழ மூன்று இலட்சம் கோடிக்கான முதலீடுகளைக் கொண்டு வந்து குவித்திருக்கிறார். அதைத் தாண்டி இந்த ஒரு முதலீட்டாளர் மாநாட்டில் மட்டும் 6,64,180 கோடி முதலீடுகள் நிச்சயம் வரும்; அதில் எந்தவொரு சந்தேகமும் வேண்டாம். இந்த இரண்டாண்டுகளில் மட்டும் நாம் கொண்டு வந்த மூன்று இலட்சம் கோடி முதலீட்டில் மட்டும் 241 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கின்றன. அதில் 167 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் advanced stagedல் இருக்கின்றன.

அதில் ஏறத்தாழ 1,22,000 கோடி, அதாவது நாம் சொன்ன 3 இலட்சம் கோடியில் 1,22,380,44 கோடிக்கான முதலீடுகள் இப்போது உறுதி செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் ஏற்கெனவே 2 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு உறுதி செய்யப்பட்டிருக்கின்றன. இந்த புள்ளி விவரங்களெல்லாம் என்னிடம் இருக்கின்றன. வருகின்ற மானியக் கோரிக்கையின் போது நீண்ட விவாதம் வைத்துக்கொள்ளலாம். அவர்களது முதலீட்டாளர் மாநாட்டைவிட நிச்சயமாக மிகப் பெரிய ஒரு வெற்றிகரமான மாநாடாக இந்த மாநாடு அமைந்திருக்கிறது. இது முதற்கட்டம் தான். இன்னும் பல ஆயிரக்கணக்கான, பல இலட்சக்கணக்கான கோடி முதலீடுகள் தமிழ்நாட்டிற்கு நிச்சயமாக திராவிட நாயகன் அவர்கள் ஆட்சியில் வந்து குவியும்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா குறிப்பிட்டார்.